கழக வெளியீடு, ௧௧௫௭

[ஆறும் புத்தகம்]

ஆசிரியர்:

திரு N K வேலன், பி ஏ

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி - 6. சென்னை - 1.
1963

என். குழந்தைவேலன் (1907)

© 1963 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED,

Ed 1 Sep 1963

P31,J9(6)
w3K3·6

AYAL NATTUK KATHAIKAL - VI

Appar Achakam, Madras - 1.

பதிப்புரை

அயல்நாட்டுக் கதைகள் என்னும் கழகச் சிறுகதை வரிசையில் இஃது ஆறும் புத்தகமாகும். இளைஞர்க்கேற்ற இனிய கதைகள் பலவற்றை எழுதியுதவிய திரு. என். கே. வேலன் அவர்களே இச் சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

கழகவழி வெளிவந்துள்ள பிற கதை நூல்களைப் போலவே இதனையும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் வாங்கிச் சிறுவர்கள் படித்து மகிழுமாறு செய்வார்களென நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பக்கம்

1.	கொல்லா விரதம்	1
2.	நல்ல மருந்து	9
3.	தோட்டக்காரன்	16
4.	நீர்முத்துமாலை	26

கொல்லா விரதம்

ஒரு பெரிய காட்டில் முனியன் என்னும் வேடன் ஒருவன் இருந்தான். அவன் அந்தக் காட்டிற்கு வெளியில் போனதில்லை. அங்கிருந்த வேடர்களைத் தவிர மற்றவர்களை அவன் பார்த்ததில்லை.

ஒருநாள் அவன் ஒரு மானைத் துரத்திச் சென்றான். ஒரு புதிய பாதை தெரிந்தது. அதன் வழியாகச் சென்றான். ஒரு புதிய ஊருக்கு வந்து சேர்ந்தான். சிறுவர்கள் பந்தாடிக் கொண்டு இருந்தார்கள். முனியன் அவர்களுடன்

சேர்ந்து நன்றாகப் பந்தாடினான். முடிவில் வெற்றி பெற்றான். ஆட்டம் முடிந்ததும் முனியனை வெற்றி மேடையில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். ஊராரெல்லாரும் அங்கே கூடி இருந்தனர். அவனை எல்லோரும் பாராட்டினர். பிறகு அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். அரசர் முனியனுக்கு விருந்தளித்தார்.

அரசருடைய மூத்த மகள் மூக்கம்மாள் பொல்லாதவள். இளைய மகள் கண்ணம்மாள் மிகவும் நல்லவள். அரசர் பெரியவளை முனியனுக்கு மணம் செய்து கொடுப்பதாகச் சொன்னார். அது முனியனுக்குப் பிடிக்க வில்லை. கண்ணம்மாளை மணந்து கொள்வதாகச் சொன்னான்.

"மூக்கம்மாள் பெரியவள். அவளுக்குத்தான் முதலில் திருமணம் செய்ய வேண்டும். நாளைக்கே முடித்து விடலாம்," என்று அரசர் கூறினார்.

முனியனுக்கு அந்த ஏற்பாடு பிடிக்கவில்லை. அன்றிரவு எல்லோரும்

உறங்கிய பிறகு அரண்மனையை விட்டு ஓட்டம் பிடித்தான். கண்ணம்மாள் அவனையே மணந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அவன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று தேடி அலைந்தாள்.

முனியன் பகல் முழுவதும் காட்டில் அலைந்தான். இரவு வந்ததும் ஒரு மரத்தடியில் படுத்து உறங்கினான். "முனியப்பா முனியப்பா?" என்று குரல் வந்தது. யாரோ மந்திரக்காரி வருகிறாள் என்று நினைத்தான். மரத்தின் மேல் ஏறி இலைகளுக்குள் மறைந்து கொண்டான். ஆனால் கண்ணம்மாள் அவனைப் பார்த்து விட்டாள். முனியன் அவளைப் பார்க்கவில்லை.

முனியனுக்கு மந்திரம் தெரியும். ஒரு கிளையை ஒடித்து அதன்மேல் ஏறிக்கொண்டான். மரக்கிளை காற்றில் பறந்து சென்றது. ஒரு மைலுக்கு அப்பால் சென்று தரையில் இறங்கியது. முனியன் எழுந்து ஓடினான். கண்ணம்மாள் அவனைத் தொடர்ந்து ஓடிவந்

தாள். அவன் ஒரு காய்ந்துபோன மரத்தின் பொந்தில் ஒளிந்து கொண்டான். கண்ணம்மாள் அங்குமிங்கும் தேடினாள். ஆனால் அவன் மறைந்திருந்த இடம் அவளுக்குத் தெரியவில்லை. வருத்தத்துடன் அரண்மனைக்குத் திரும்பினாள்.

"தப்பினேன் பிழைத்தேன்," என்று முனியன் மரத்தைவிட்டு வெளியில் வந்தான். பசி எடுத்தது. அருகில் ஒரு குளம் இருந்தது. குளக்கரையில் கம்பளியை விரித்துவிட்டுக் குளத்தில் இறங்கி நீர் அருந்தினான். கம்பளி விரித்த இடத்திற்குத் திரும்பி வந்தான். அந்த இடத்தில் அழகான குடிசை கட்டப்பட்டிருந்தது. ஓர் அழகிய பெண் சோறு சமைத்துக் கொண்டு இருந்தாள்.

"நீ பசியோடு இருக்கிறாய்! உணவு சமைத்தாகி விட்டது; நீ சாப்பிடலாம்," என்றாள்.

அடுப்பில் வேகும் உணவை எடுத்துச் சிறிது சிறிதாகச் சாப்பிட்டுக் கொண்டே பேசினாள்.

"உனக்கு வேண்டியதெல்லாம் கொடுப்பேன். உன்னை நன்றாகப் பார்த்துக் கொள்வேன்," என்று சொன்னாள்.

"எனக்குக் கொடுக்காமல் சாப்பிடுகிறாளே," என்று முனியன் கோபம் கொண்டான். கம்பளியைப் போர்த்துக் கொண்டு மூலையில் படுத்துக் கொண்டான். அவளுடன் பேசவில்லை. காலையில் எழுந்து பார்த்தான். சட்டியில் ஒரு சோறுகூடக் கிடையாது. உணவு எல்லாம் அந்த மாயக்காரியே சாப்பிட்டு விட்டாள்.

உண்மையில் அவள் பெண் அல்லள். அவள் நின்ற இடத்தில் ஓர் ஓநாய்

நின்றது. அதை அடிப்பதற்குக் கையை ஓங்கினான். ஓநாய் சிரித்துக் கொண்டே காட்டிற்குள் ஓடிவிட்டது. மூக்கம்மாளின் சிரிப்பு ஒலி கேட்டது. அரசருடைய மூத்தமகளே ஓநாயாக வந்தாள் என்பதை உணர்ந்தான்.

மறுநாள் கண்ணம்மாள் வந்து சேர்ந்தாள். முனியனைக் கண்டதும் ஆனந்தம் அடைந்தாள். அவனுக்கு நல்ல உணவு சமைத்துக் கொடுத்தாள்.

“சாப்பாடு நன்றாக இருக்கிறது. நீயும் என்னுடன் சாப்பிடு!” என்றான்.

“எனக்கு இப்பொழுது பசி இல்லை. சற்று நேரம்கழித்துச் சாப்பிடுகிறேன்,” என்று சொன்னாள். அவன் சாப்பிட்டு முடிந்ததும் மிகுதியாக இருந்ததை அவள் சாப்பிட்டாள்.

முனியன் கண்ணம்மாளைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்றான். அவளைத் திருமணம் செய்துகொண்டு இன்பமாக வாழ்ந்து வந்தான்.

“நாம் எப்பொழுதும் இன்பமுடன் இருக்கவேண்டுமானால் ஒன்றை மட்டும்

நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்," என்று கண்ணம்மாள் சொன்னாள்.

"என்ன அது?" என்று முனியன் கேட்டான்.

"என் காலில் ஈரம்படக் கூடாது. ஈரம்பட்டால் நான் நீர்ப்பறவையாக மாறி விடுவேன்," என்றாள்.

முனியன் கண்ணம்மாளின் கால்களில் தண்ணீர் படாமல் பார்த்துக் கொண்டான். ஆறு, ஓடை முதலியவைகளைக் கடந்து சென்றால் அவளைத் தூக்கிச் செல்வான். ஆழமாக இருந்தால் பாலம் கட்டி அதன்மேல் அழைத்துச் செல்வான்.

பல ஆண்டுகளுக்குப்பின் ஒருநாள் இருவரும் ஒரு காட்டின் வழியாகச் சென்றனர். குறுக்கே ஒரு சிறிய ஓடை வந்தது. அது ஓர் அடி அகலமே இருந்தது. கண்ணம்மாளின் கையில் அவளுடைய குழந்தை இருந்தது.

"மிகவும் சிறிய ஓடைதானே! தாண்டிப் போய் விடலாம்," என்று

முனியன் சொன்னான். அவன் முன்னால் தாண்டிச் சென்றான். கண்ணம்மாள் பின் தொடர்ந்து சென்றாள். சேற்றில் வழுக்கி விழுந்தாள். முனியன் திரும்பிப் பார்த்தான். கண்ணம்மாளும் அவள் குழந்தையும் நீர்ப்பறவைகளாக மாறித் தண்ணீரில் நீந்திச் சென்றனர்.

முனியன் கதறி அழுதான். நீர்ப் பறவையாக மாறிய மனைவியைத் திரும்பி வரும்படி அழைத்தான்.

"தாங்கள் நான் சொன்னதை மறந்து விட்டீர்கள். என் காலில் ஈரம் படாமலிருக்க வேண்டும் என்று சொன் னேன். இப்பொழுது ஈரம் பட்டு விட் டது. இனிமேல் என் ஆயுட்காலம் முழுவதும் நீர்ப்பறவையாகவே இருக்க வேண்டும்!" என்று சொல்லிவிட்டு ஓடி மறைந்தது.

முனியன் வருத்தத்துடன் வீடு திரும்பினான். வேட்டையாடும் தொழிலை விட்டு விட்டான். உயிர்களைக் கொல்வ தில்லை என்று விரதம் கொண்டான்.

நல்ல மருந்து

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவன் முரட்டுத் தன்மையுடையவன். ஆராய்ந்து பாராமல் எதையும் செய்வான். அரசனுக்கு ஏற்ற அரசி. மூளைக்கு வேலை கொடுப்பதில்லை.

அரசிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

"ஏன் குழந்தை இவ்வளவு சிறியதாக இருக்கிறது?" என்று அரசி கேட்டாள்.

"தலை மொட்டையாக இருக்கிறதே" என்று அரசன் வருத்தப்பட்டான்.

"ஒரு பல்கூட இல்லை; வாய் பொக்கையாக இருக்கிறது" என்று அரசி கூறினாள்.

"இது என்ன குழந்தை; இப்படி இருக்கிறதே!" என்று இருவரும் கவலைப்பட்டார்கள்.

"எல்லாக் குழந்தைகளும் இப்படித்தான் இருக்கும்" என்று அமைச்சர் கூறினார். "பிறந்த குழந்தைகளுக்குப் பல் இருக்காது" என்றார். அரசனும் அரசியும் அதை நம்பவில்லை.

"எங்களுக்குக் கண்கள் இருக்கின்றன. குழந்தை இருக்கும் நிலைமையை நாங்கள் நேரில் பார்க்கிறோம். நீங்கள் சொல்வது சரி அன்று" என்று சொல்லி விட்டார்கள். பிறகு அந்த ஊரிலுள்ள மருத்துவர்களை எல்லாம் வரவழைத்தார்கள்.

"எங்களுடைய குழந்தை மிகவும் சிறியதாக இருக்கிறது. தலை வழுக்கையாக இருக்கிறது. பற்களும் இல்லை. நீங்கள் உடனே நல்ல மருந்து ஒன்று செய்ய வேண்டும். அந்த மருந்தைக்

கொடுத்தவுடன் குழந்தை பெரிதாக வேண்டும். கூந்தல் வளரவேண்டும். பற்களும் உடனே முளைக்க வேண்டும்" என்று அரசன் கட்டளையிட்டான்.

"எங்களால் செய்ய முடியாது. உலகிலேயே எவரும் காணாத அற்புதம்" என்று மருத்துவர்கள் சொன்னார்கள்.

"முயற்சி செய்து பாருங்கள். இது என்னுடைய ஆணை. எப்படியாவது நிறைவேற்றுங்கள்" என்று உத்தரவிட்டான்.

மருத்துவர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

"இன்னும் சிறிது நேரத்தில் உங்களுடைய முடிவை என்னிடம் தெரிவிக்க வேண்டும்" என்று சொல்லிக் கோபத்துடன் வெளியில் போய் விட்டார்.

மருத்துவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பாவம்! என்ன செய்வார்கள்? கடுமையான உத்தரவு. அரசன் அரசியுடன் திரும்பி வந்தான்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் அரசன்.

எல்லோரும் பேசாமல் நின்றார்கள்.

"என்னுடைய உத்தரவை நீங்கள் மீறிவிட்டீர்கள். தகுந்த தண்டனை கொடுக்கிறேன்" என்று மிரட்டினான்.

வயது முதிர்ந்த மருத்துவர் ஒருவர் முன்னால் வந்தார்.

"நாங்கள் சொல்வது தங்களுக்கு விளங்கவில்லை என்று நினைக்கிறேன். நாங்கள் ஒரு மருந்து செய்கிறோம். அது இளவரசிக்கு ஏற்ற மருந்தாக இருக்கும்" என்றார்.

"மிகவும் நல்லது; மருந்து எங்கே?" என்று அரசன் கேட்டான்.

"சிறிது காலம் பொறுத்துக் கொள்ளவேண்டும். இன்னும் மருந்து செய்யவில்லை. அதற்குக் கொஞ்சம் தாமதம் ஏற்படும்" என்று பெரியவர் சொன்னார்.

"ஏன் தாமதம்? நான் அரசன் அல்லவா? மருந்து உடனே செய்ய

வேண்டும். நான் காத்திருக்க முடியாது.” என்று அரசன் சொன்னான்.

“மருந்து செய்வதற்கு முந்நூற்று அறுபத்தைந்து மூலிகைகள் வேண்டும். அவைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குப் பல நாட்கள் செல்லும்” என்று பெரியவர் மெதுவாகச் சொன்னார்.

“அது எனக்குத் தெரியும். உங்களுக்கு வேண்டிய பொருள்களை எல்லாம் வாங்கிக் கொள்ளலாம். உடனே மருந்து செய்து கொடுக்க வேண்டும். எவ்வளவு செலவானாலும் சரி” என்றான்.

“நான்காவது பூ மலர்ந்தவுடன் ஒரு செடியை எடுக்கவேண்டும். அந்த மலர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் மலரும். பூமியிலிருந்து சில மருந்துகளைத் தோண்டி எடுக்க வேண்டும். உறைந்திருக்கும் பனிக்கட்டி உருகிய பிறகுதான் நிலத்தைத் தோண்டமுடியும். பனிக்கட்டியும் ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உருகும்” என்று பண்டிதர் பொறுமையாகச் சொன்னார்.

"சரி சரி; அப்படியானால் எத்தனை நாட்கள் செல்லும்? ஒருவாரத்தில் முடியுமா?" என்று அரசன் கேட்டான். அவனுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.

"இளவரசியை எங்களிடம் ஒப்புவித்து விடுங்கள். பன்னிரண்டு ஆண்டுகளில் அவள் அழகிய பெண்ணாகி விடுவாள்" என்று பெரியவர் சொன்னார்.

"பன்னிரண்டு ஆண்டுகளா? மிகவும் நீண்டகாலம் ஆயிற்றே! என்ன செய்வது? இளவரசியை அவர்களிடம் ஒப்புவிக்கலாமா?" என்று அரசன் அரசியிடம் கேட்டான்.

"சரி; பன்னிரண்டு ஆண்டுகள் பொறுத்துப் பார்க்கலாம். அவர்கள் சொன்னபடி நடக்காவிட்டால் அவர்களுக்கு ஆயுள் தண்டனை கொடுக்க வேண்டும்" என்று அரசி கூறினாள்.

அரசன் இளவரசியை மருத்துவர்களுடன் அனுப்பினான். இளவரசிக்கு நல்ல பயிற்சி அளிக்கப்பட்டது. நன்றாகக் கல்வி பயின்று தேர்ச்சி

அடைந்தாள். பன்னிரண்டு ஆண்டு களுக்குப்பின் இளவரசியை அரசனிடம் அழைத்து வந்தனர். அவள் மிகவும் அழகாய் இருந்தாள். முத்துப் போன்ற பற்கள். அழகிய கூந்தலுடன் விளங் கினாள்.

அரசனுக்கு ஆனந்தம் பொங்கிற்று. மருத்துவர்களுக்கு எல்லாம் நல்ல வெகு மதி கிடைத்தது. அரசன் இறந்தபிறகு இளவரசி பட்டத்திற்கு வந்தாள். தாய் தந்தையர்களை விட அறிவில் சிறந்து விளங்கினாள். நன்றாக ஆட்சி நடத் தினாள்.



முன் ஒரு காலத்தில் ஒரு தோட்டக்காரன் இருந்தான். அவனும் அவனுடைய மனைவியும் ஒரு குடிசையில் வசித்து வந்தார்கள். அவர்களுக்குக் குழந்தையே கிடையாது. ஒரு நாய்க் குட்டியைக் குழந்தைபோல் அன்புடன் வளர்த்து வந்தனர். அந்த நாய் மிகவும் நன்றியுடன் வீட்டிற்குக் காவல் இருந்தது.

அடுத்த வீட்டில் ஒரு கிழவன் இருந்தான். அவன் மிகவும் பொல்லாதவன். நாயைக் கண்டால் அவனுக்குப் பிடிக்காது. அதைக் கல்லால் அடிப்பான்.

ஒரு நாள் நாய் தோட்டத்தில் நின்று கொண்டு குலைத்தது. தோட்டக்காரன் வெளியே சென்று பார்த்தான். நாய் ஓடிவந்து அவன் சட்டையைப் பிடித்து இழுத்துச் சென்றது. ஒரு மரத்தின் அடியில் நின்று தன் கால்களால் நிலத்தைத் தோண்டிற்று. மறுபடியும்

தோட்டக்காரனைப் பார்த்துக் குலைத்தது. தோட்டக்காரன் ஒரு மண் வெட்டியை எடுத்துக் கொண்டு வந்தான். நாய் காட்டிய இடத்தைத் தோண்டினான். ஒரு குடம் நிறையத் தங்க நாணயங்கள் இருந்தன. அவன் தன் மனைவியை அழைத்துக் காண்பித்தான்.

இருவரும் சேர்ந்து குடத்தை வீட்டிற்குள் தூக்கிச் சென்றனர்.

பக்கத்து வீட்டுக்காரன் நடந்தவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டே இருந்தான். அடுத்த நாள் தோட்டக்காரனிடம் வந்தான்.

"உன்னுடைய நாயைச் சிறிது நேரம் என்னுடன் அனுப்புகிருயா? கொஞ்சம் வேலை இருக்கிறது" என்முன்.

"நாயின் உதவி வேண்டுமானுல் அழைத்துப்போ. தடை ஒன்றும் இல்லை" என்று தோட்டக்காரன் சொன்ஞன்.

பக்கத்து வீட்டுக்காரன் நாயை அழைத்துச் சென்முன். "நாமும் பணக்காரர் ஆகலாம்" என்று தன் மனைவியிடம் சொன்ஞன்.

ஒரு மண்வெட்டியை எடுத்துக் கொண்டு தோட்டத்திற்குச் சென்முன்.

"புதையல் எங்கே இருக்கிறது?" என்று நாயிடம் கேட்டான். நாயின் தலையைப் பிடித்து முரட்டுத் தனமாய் மண்ணில் அமிழ்த்திஞன். "மோப்பம்

பிடித்துக் கண்டு பிடி" என்று அதட்டினான். பாவம்! நாய் என்ன செய்யும்? ஓரிடத்தில் நிலத்தைக் கீறிப் பார்த்தது.

"சரி சரி இங்கே தான் இருக்கிறது" என்று அந்தப் பேராசைக்காரன் நிலத்தைத் தோண்டினான். நாயைப் பிடித்துத் தள்ளி விட்டுப் பெரிய குழி தோண்டினான். தோண்டித் தோண்டிப் பார்த்தான். ஒன்றும் கிடைக்கவில்லை.

"தோட்டக்காரனுக்கு மட்டும் பொன் தேடிக் கொடுத்தாய். எனக்கு மண்ணைக் கொடுத்தாய்" என்று நாயை மண்வெட்டியால் அடித்தான். தலையில் அடிபட்டு நாய் கீழே சாய்ந்தது. அதன் உயிர் நீங்கிற்று.

இரண்டு மூன்று நாட்கள் கழித்துத் தோட்டக்காரன் நாயைத் தேடிக் கொண்டு வந்தான்.

"வேலை முடிந்து விட்டதா? நாயை அழைத்துப் போகலாமா?" என்று கேட்டான்.

"நாயைக் கொன்று விட்டேன்" என்று கிழவன் சொன்னான்.

“என் அருமை நாயைக் கொன்று விட்டாயா? ஒரு வார்த்தை கூட என்னிடம் சொல்லவில்லையே? ஏன் அப்படிச் செய்தாய்?” என்று தோட்டக்காரன் கேட்டான்.

“அதற்கு வேலை கொடுத்தேன். அந்த வேலையை நாய் சரியாகச் செய்யவில்லை. கோபம் வந்தது. அடித்துக் கொன்றுவிட்டேன்” என்று கூசாமல் சொன்னான். தோட்டக்காரன் மிகவும் வருத்தமடைந்து அழுதான்.

“இறந்து போனதையாவது என்னிடம் கொடுத்துவிடு; நான் அதைக் கொண்டுபோய் என் தோட்டத்தில் புதைத்து வைக்கிறேன்” என்று பணிவுடன் கேட்டான்.

“அதை மரத்தின் அடியில் புதைத்து விட்டேன். இப்பொழுது எப்படிக் கொடுக்க முடியும்?” என்றான் கிழவன்.

“அந்த மரத்தையாவது விலைக்குக் கொடு. நாயின் நினைவுக்காக வைத்துக் கொள்கிறேன்” என்று கேட்டான்.

பேராசைக்காரன் அதற்குச் சம்மதித்தான். தோட்டக்காரன் அந்த மரத்தை வெட்டித் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான். தன் மனைவியிடம் நாயின் சோகக் கதையைச் சொன்னான். அவளும் கண்ணீர்விட்டு அழுதாள்.

அவர்கள் கொண்டு வந்த மரத்தினால் அழகிய கோப்பை ஒன்று செய்து அதில் கோதுமை மாவைப் பிசைந்து ரொட்டி செய்தார்கள்.

"நமது நாய் இருந்தால் இதை நன்றாய்ச் சாப்பிடும்" என்று சொல்லி வருத்தப் பட்டார்கள். மிகவும் குறைந்த அளவில் மாவைப் போட்டுப் பிசைந்தார்கள். அதில் எப்படியோ ஏராளமான ரொட்டிகள் வந்து சேர்ந்தன. ரொட்டியும் நன்றாக இருந்தது.

அடுத்த வீட்டுக்காரன் இதைக் கேள்விப்பட்டான். மெதுவாகத் தோட்டக்காரனிடம் வந்தான். "உன் மரக்கோப்பையைக் கொஞ்சம் தருகிறாயா? ரொட்டி செய்ய வேண்டும்" என்று கேட்டான்.

தோட்டக்காரன் மிகவும் நல்லவன். கெடுதல் செய்தவனுக்கும் நன்மை செய்யவேண்டும் என்னும் கொள்கை உடையவன்.

'சரி; எடுத்துக்கொண்டு போ. இரண்டு நாட்களில் கொடுத்து விடு" என்றான்.

பலநாட்கள் சென்றன. மரக்கோப்பையைத் திருப்பிக் கொடுக்கவில்லை. தோட்டக்காரன் பக்கத்து வீட்டுக்குப் போய்க் கேட்டான்.

"அஃதென்ன பழைய கோப்பை தானே. அது சாம்பல் ஆகிவிட்டது. அதைத் தீயில் போட்டு எரித்து விட்டேன்" என்று சொன்னான்.

"நான் என்ன தவறு செய்தேன்? கோப்பையை ஏன் நெருப்பில் போட்டாய்?" என்று தோட்டக்காரன் கேட்டான்.

"அந்த மோசமான கோப்பையில் மாவைப் போட்டால் மண்ணாய்ப் போகிறது. அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது?" என்று சொன்னான்.

"போனால் போகட்டும்; அந்தச் சாம்பலையாவது கொடு" என்று கேட்டு வாங்கிச் சென்று செடிகளின்மேல் தூவினான். காய்ந்து போன செடிகள் எல்லாம் தளிர்த்துப் பூத்துக் குலுங்கின. தோட்டக்காரன் மனைவியை அழைத்துக் காண்பித்தான். இருவரும் ஆனந்தம் அடைந்தனர்.

சில நாட்களுக்குப் பின் அரசரிடம் இருந்து ஒரு தூதர் வந்தார்.

"அரசருடைய தோட்டத்தில் ஒரு மரம் காய்ந்து விட்டது. அதற்குப் போடுவதற்குக் கொஞ்சம் திருநீறு வேண்டும். காய்ந்த மரம் பிழைக்குமா?" என்று கேட்டார்.

"ஆண்டவன் அருள் இருந்தால் பிழைக்கும்" என்று தோட்டக்காரன் சொன்னான். தூதர் அவனை அரசரிடம் அழைத்துச் சென்றார்.

தோட்டக்காரன் திருநீற்றை எடுத்துக் காய்ந்து போன மரத்தின் மேல் தூவினான். அடுத்த விநாடியில் மரம் தழைத்துப் பூக்கள் நிறைந்து

விட்டன. அரசர் மகிழ்ச்சி அடைந்தார். தோட்டக்காரனுக்குப் பல வெகுமதிகளை வழங்கினர்.

அண்டைவீட்டுக்காரன் இதைப் பற்றிக் கேள்விப்பட்டான். "என்னுடைய சாம்பலைத்தான் அவன் வைத்துக் கொண்டு ஆட்டம் போடுகிறான். என்னிடம் அந்தச் சாம்பல் நிறைய இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டான். ஒரு கூடைநிறையச் சாம்பலை எடுத்துக் கொண்டு வெளியில் சென்றான். "காய்ந்த மரத்தைப் பச்சைமரம் ஆக்குவேன்; சாம்பல் வேண்டுமா சாம்பல்" என்று தெருவில் கூவிக்கொண்டு அரண்மனையின் வாசலுக்கு வந்தான்.

"அவனை அழைத்து வாருங்கள்" செடிகளுக்குத் திருநீறு போடலாம்" என்று அரசர் கட்டளையிட்டார். பேராசைக்காரன் உள்ளே வந்தான்.

"முன்னல் வந்த தோட்டக்காரன் நீதானு? முகம் மாறுபட்டு இருக்கிறதே!" என்று அரசர் கேட்டார்.

"உண்மையான மந்திரம் என்னிடம் தான் இருக்கிறது" என்று பெருமை பேசினன்.

அரசர் காய்ந்த மரம் ஒன்றைக் காண்பித்தார். "இதைப் பச்சை மரம் ஆக்க முடியுமா?" என்று கேட்டார்.

சாம்பலை எடுத்து மரத்தின் மேல் தூவினன். காய்ந்து போன மரம் அப்படியே இருந்தது. மேலும் மேலும் தூவிப் பார்த்தான். காற்றில் தூவிய சாம்பல் அரசர் கண்ணிலும் பட்டது. அரசருக்குக் கோபம் வந்தது.

"அவனைப் பிடித்துச் சிறையில் அடையுங்கள். அவன் எல்லோரையும் ஏமாற்றுகிருன்" என்று அரசர் கூறினர்.

பேராசைக்காரன் சிறைக்குப் போய்ச் சேர்ந்தான். தோட்டக்காரன் தன் மனைவியுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். அவன் புகழ் நாடு எங்கும் பரவியது.

நீர் முத்துமாலை



ஓர் ஊரில் ஓர் இளவரசி இருந்தாள். அவள் நல்ல அழகி. அரசர் அவளுக்கு அதிகச் செல்வம் கொடுத்து விட்டார். அவள் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்தார். இளவரசியிடம் துணி மணிகளும் நகைகளும் நிரம்ப இருந்தன.

ஒரு நாள் அவளுடைய முகம் வாட்டமுற்று இருந்தது. "என் கண்ணே! உனக்கு என்ன வேண்டும்? ஏன் வாடியிருக்கிறாய்? ஏன் பெருமூச்சு விடுகிறாய்? இன்னும் நகை வேண்டுமா? நகை செய்பவர்கள் உனக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்

னும் உடை வேண்டுமா? தையற்காரர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.'' என்று அரசர் சொன்னார்.

இளவரசி மறுபடியும் பெருமூச்சு விட்டாள். ''அப்பா! நீங்கள் என்னிடம் மிகவும் அன்போடு இருக்கிறீர்கள். பெட்டி நிறைய நகைகள் இருக்கின்றன. ஒரே ஒரு நகை மட்டும் எனக்குக் கிடைக்கவில்லை'' என்றாள்.

அரசர் உடனே நகை செய்பவரை வரவழைத்து, ''இளவரசிக்கு வேண்டிய நகையை ஏன் செய்து கொடுக்கவில்லை?'' என்று அதட்டினார். காவலாளியைக் கூப்பிட்டார். ''இவன் தலையை வெட்டி விடு'' என்று உத்தரவிட்டார்.

''வேண்டா, அவரைக் கொன்று விட்டால் நகை எப்படிக் கிடைக்கும்? நகை செய்வதில் மிகவும் கெட்டிக்காரர்'' என்று தடுத்து நிறுத்தினாள்.

''சரி. வேண்டியதைச் சொல். செய்து கொடுக்கட்டும்'' என்றார்.

இளவரசி அரசரைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றாள். தோட்

டத்தில் தண்ணீர் பொங்கி வழிந்து கொண்டு இருந்தது.

"நீர்த் துளிகளைப் பாருங்கள். சூரியனுடைய ஒளிபட்டு அவை பல நிறங்களுடன் காட்சி அளிக்கின்றன. வைரங்களைப் போல் மின்னுகின்றன. நீர்த் துளிகளால் செய்யப்பட்ட முத்துமாலை ஒன்று எனக்கு வேண்டும்" என்றாள்.

அரசர் வியப்படைந்தார். "நீர்த் துளிகளால் செய்த முத்துமாலையா வேண்டும்? யாம் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை. ஆனால் யாம் அரசர்களுக்கு எல்லாம் அரசர். யாம் விரும்பினால் ஆகாதது என்ன இருக்கிறது? எம் அருமை மகள் கேட்பதை எப்படி இல்லை என்று சொல்வது?" என்று தாமாகவே பேசிக்கொண்டார்.

"இளவரசி கேட்டது உன் காதில் விழுந்ததா? நீர்முத்துமாலை ஒன்று செய்ய வேண்டும். மூன்று நாட்களில் செய்து முடிக்காவிட்டால் உன் தலை போய்விடும்" என்று நகைக்காரரை எச்சரிக்கை செய்தார்.

"இப்பொழுதே வேண்டுமானால் என் தலையை வெட்டிவிடலாம். இளவரசிக்கு வேண்டிய மாலை என்றால் செய்ய முடியாது. நீர்த்துளியால் செய்வதற்கு எவராலும் ஆகாது" என்றான்.

"என்ன சொன்னாய்? மன்னன் வார்த்தைக்கு மறுவார்த்தை உண்டா? இன்னொரு நகைக்காரன் அதைச் செய்யப்போகிறான். அதை நீ பார்த்துவிட்டுச் சாகலாம்; அதுவரை பிழைத்திரு" என்று அரசர் கூறினார். அந்த நகைக்காரனைப் பிடித்துச் சிறையில் அடைத்தார். "நீர்த்துளியால் முத்து மாலை எவர் செய்யப்போகிறார்? பார்க்கலாம்" என்று நகைக்காரன் பொறுமையுடன் சிறையில் இருந்தான்.

அரசருடைய ஆட்கள் நாடு முழுவதும் சுற்றி நகை செய்பவர்களை எல்லாம் அரசர் முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். செய்யமுடியாது என்று சொன்னவர்களை எல்லாம் சிறைப்படுத்தினார். சில நகைக்காரர்கள் கண்ணாடிகளாலும் வைரங்களாலும் செய்து கொடுத்து

ஏமாற்றினர். அவர்களுக் கெல்லாம் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இன்னும் சிலர் தங்கள் கடைகளை அடைத்து விட்டுத் தலை மறைவாகப் போய்விட்டனர். நகை செய்பவர்கள் கிடைப்பதே அரிதாகிவிட்டது.

அரசர் வருத்தம் அடைந்தார். இளவரசியிடம், "நீ விரும்பிக் கேட்ட முத்துமாலையை எவராலும் செய்ய முடியவில்லை. நகைக்காரர்கள் கிடைப்பது அருமையாகிவிட்டது. சிறைக்கு வெளியில் இருப்பவர்களும் மறைந்து கொண்டார்கள். அந்த ஆசையை நீ விட்டுவிட வேண்டியதுதான்" என்ருர்.

"அரசரால் முடியாதது ஒன்று உண்டா? நான் விரும்பிய பொருளை உங்களால் கொடுக்க முடியாதா? அந்த நகை எனக்குக் கட்டாயம் வேண்டும்" என்று பிடிவாதம் செய்தாள்.

நீர்த்துளிகளால் மாலை செய்து கொடுப்பவருக்குச் சிறந்த வெகுமதி அளிப்பதாக அரசர் பறை சாற்றினர்.

எவரும் முன்வரவில்லை. ஆறுவது நாள் ஒரு சாமியார் வந்தார்.

"தங்கள் உத்தரவுப்படி முத்து மாலை செய்து தருகிறேன்" என்றார்.

"சாமியாருக்கு நகை செய்யத் தெரியுமா? பைத்தியக்காரன் போல் இருக்கிறார்" என்று அரசர் நினைத்தார்.

"கவலைப்பட வேண்டாம். நான் செய்துதருகிறேன்" என்று சாமியார் சொன்னார்.

அரசர் இளவரசியை அருகில் அழைத்தார்.

"உடனே செய்து கொடுங்கள்" என்று இளவரசி கேட்டாள்.

"ஒரு வேண்டுகோள்" என்றார் பெரியவர்.

"என்ன வேண்டும்? சொல்லும்" என்றார் அரசர்.

"சிறையில் இருப்பவர்களை விடுவிக்கவேண்டும்" என்றார். எல்லோரையும் உடனே விடுவிக்கும்படி அரசர் ஆணையிட்டார்.

"தண்ணீரில் முத்துமாலை செய்ய உம்மால் முடியுமா?" என்று இளவரசி கேட்டாள்.

"செய்ய முடியும்; ஆனால் நீங்கள் முதலில் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்" என்றார் சாமியார்.

"என்ன உதவி வேண்டும்?" என்று இளவரசி கேட்டாள்.

"நீர்த்துளிகளை அப்படியே பொறுக்கிக் கொடுங்கள். நான் மாலையாகக் கோத்துத் தருகிறேன்" என்றார். இளவரசி வெட்கித் தலை குனிந்தாள்.